ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1687/50 - 2011 ජනවාරි මස 08 වැනි සෙනසුරාදා - 2011.01.08
*1687/50 ஆம் இலக்கம் – 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதி சனிக்கிழமை*
*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்***

***கட்டளை***

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 2 ஆம் 4 ஆம் மற்றும் 6 ஆம் பிரிவுகளினாலும் மற்றும் 185 ஆம் பிரிவின் 5 ஆம் உட்பிரிவின் (ஆ) பந்தியினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாஉல்லா ஆகிய நான், இக்கட்டளை மூலம்,*

*(1) இதற்கான அட்டவணையின் பாகம் i இல் குறித்துரைக்கப்பட்டுள்ள இடப்பரப்பை அச்சட்டத்தின் நோக்கங்களுக்கென பிரதேச சபை இடப்பரப்பொன்றாக வெளிப்படுத்துகின்றேன்.*

*(2) அந்த அட்டவணையின் பாகம் ii இல காட்டப்பட்டுள்ள எல்லைகளை, அப்பிரதேச சபை இடப்பரப்பின் நிர்வாக எல்லைகளாக வரையறுக்கின்றேன்.*

*(3) இக்கட்டளையின் (i) ஆம் பந்தியின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட பிரதேச சபை இடப்பரப்புக்கென ஒரு பிரதேச சபையை அமைத்துருவாக்கி அத்தகைய சபைக்குப் பின்வரும் பெயரைக் குறித்தொதுக்குகின்றேன்.*

***" உடபளாத்த பிரதேச சபை"***

*(4) உடபளாத்த பிரதேச சபையானது தவிசாளரையும், உப தவிசாளரையும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏனைய இருபது (20) உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டுமென விதித்துரைக்கின்றேன்.*

*(5) உடபளாத்த பிரதேச சபையின் பதவிக்காலம் ஆரம்பமாக வேண்டிய திகதியாக 2011, ஏப்ரல் மாதம் முதலாம் திகதியைக் குறித்துரைக்கின்றேன்.*

*(6) மத்திய மாகாணத்தின் முதலமைச்சரும் உள்ளூராட்சிதுறை அமைச்சருமாகியவரினால் 2010, ஜனவரி மாதம் 22 ஆந் திகதிய 1637/24 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உடபளாத்த பிரதேச சபையை கலைப்பதற்கான கட்டளையை 2011, ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வரை அமுலுக்கு வரும் வகையில் நீக்குகின்றேன்.*

*ஏ. எல். எம். அதாஉல்லா,*
*உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர்.*

*உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு,*
*கொழும்பு,*
*2011, சனவரி 05.*

*அட்டவணை*

*பாகம் I*

*உடபளாத்த பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள பின்வரும் கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய காணி இடப்பரப்பு :-*

*(1120) இலங்கவத்த, (1121) உணம்புவ, (1130) ரணவல, (1131) போவல, (1159)எகொடகளுகமுவ, (1166) தல்பிற்றிய, (1167) நவதேவிற்ற, (1168) பள்ளேகம, (1169)அமுஹேன, (1170) வத்தேஹேன, (1171) உடகம, (1172) மில்லகஸ்பிற்றிய, (1174) இகளகமுவ, (1175)ஹுணுகொட்டகம, (1176) புசெல்லாவ, (1177) வஹூகபிற்றிய, (1172) பாறதெக்க, (1179) புசெல்லாவகம, (1180) தொறகல, (1183) துணுகேஉள்ள, (1184) வணஹப்புவ, (1185) கலஹேற, (1186) கெக்குளந்த, (1187) மாவத்துற, (1188) வெலிகஹ, (1189) களுகல்ஹின்ன, (1128) ஹப்புகஸ்பிற்றிய, (1165) அமுனுபுர, (1132) முல்கம, (1133) பிற்றவல, (1134) உடுதெனிய, (1135) பள்ளேதெல்தொட்ட, (1136) நவநில்லம்ப, (1137) நில்லம்ப, (1138) குருகலே, (1139) நவகுருகலே, (1140) தும்பாலவக்க, (1141) மக்கொள்ள, (1142) ஹூணுகல, (1143) துன்தெனிய, (1144) கஹவத்த, (1145) கொத்தட்டுவெல, (1146) லகும்தெனிய, (1147) பன்விலதென்ன, (1149) நாரங்விற்ற, (1150) கம்பொளவத்த, (1151) அட்டுவேவத்த, (1152) வெவதன்ன, (1153) இங்குருவத்த, (1154) ஒறாயன்வத்த, (1155) தொளுவ, (11156) கொடவெல, (1157) மெகொட களுகமுவ, (1158) கணேகொட, (1160) ஹல்ஓயா, (1161) வாரியகல, (1162) கல்ஓயா, (1173) மில்லகஹமுல, (1181) புப்புரஸ்ஸ, (1182) ரஜதலாவ, (1148) தம்பதெனிய.*

*பாகம் II*

*உடபளாத்த பிரதேச சபையின் நிர்வாக எல்லைகள் :-*

*வடக்கு :*

*எல்லைத் தேசப்படம் 320075 வலயம் 5 இன் துண்டு இலக்கம் 5:45 இன் மேற்கு எல்லையில் ஆரம்பமாகும் உடபளாத்த பிரதேச, செயலாளர் பிரிவின் வடக்கு எல்லை அங்கிருந்து எல்லை தேசப்படம் 320075 இன் துண்டு 5:44, 5:43, 5:23, 5:17, 5:16, 5:15 மற்றும் 5:14 இன் மேற்கு எல்லை வழியேயும் அங்கு சந்திக்கும் 5:13 இன் பாதையை ஊடறுத்து 5:12 இன் வட எல்லை வழியேயும் அங்கு சந்திக்கும் 5:10 இன் மூலம் காட்டப்படும் கால்வாய் வழியே கிழக்கு நோக்கியும் அங்கு துண்டு 5:9 மூலம், காட்டப்படும் வீதியைச் சந்திக்கும் இடத்தின் வடக்கேயும், அங்கிருந்து 5:7, 5:6, 5:4, 5:2 துண்டுகளின் மேற்கு எல்லை வழியேயும் அய்கு சந்திக்கும் வீதியை ஊடறுத்து எலலைத் தேசப்படம் 320075 வலயம் 4 இன் 4:1 கால்வாயின் வடக்கு எல்லை வழியே எல்லைத் தேசப்படம் 320075 வலயம் 3 இன் 3:7, 3:10, 3:11, 3:12, 3:13, 3:35, 336, 3:38, 3:54, 3:55, 3:56, 3:57, 3:58, 3:59, 3:60, 3:75, 3:76, 3:77, 3:108, 3:110, 3:112, 3:114 இன் வடக்கு எல்லை வழியே சென்று 320126 வலயம் 2 இன் துண்டு இலக்கம் 2:1, 2:4, 2:5, 2:6, 2:7, 2:8, 2:9, 2:15, 2:18, 2:21, 2:22, 2:26, 2:27, 2:30, 2:31, 2:46, 2:47, 2:48, 2:49, 2:50 இன் வடக்கு எல்லை வழியே கிழக்கு நோக்கியும் அங்கிருந்து எல்லைத் தேசப்படம் 320117 இன் வலயம் 1 இன் 1:9, 1:3, 1:2 மூலம் காட்டப்படும் வீதியின் வழியே கிழக்கு நோக்கியும், அவ்வீதியின் வழியே எல்லைத் தேசப்படம் 32048 வலயம் 1 பத்திரம் 2 இன் துண்டு 1:41, 1:49, 1:52, 1:39, 1:38, 1:29, 1:28 இன் மேற்கு எல்லை வழியே வடக்கு நோக்கியும் அங்கிருந்து துண்டு 1:27 கால்வாய் வழியே எல்லைத் தேசப்படம் 320148 வலயம் 2 வரையும் அங்கிருந்து எல்லைத் தேசப்படம் 320148 வலயம் 2 இன் துண்டு 2:12 ஆன கால்வாய் வழியே கிழக்கு நோக்கியும் அங்கு துண்டு 2:10 மேற்கு எல்லை வழியே வடக்கு நோக்கியும் அங்கிருந்து அவ்வரைபடத்தின் துண்டு 2:5, 2:4 இன் மேற்கு எல்லை வழியே வடக்கு நோக்கியும் அங்கு சந்திக்கும் 2:1 ஆன களகெடியாவ ஓயா வழியே கிழக்கு நோக்கியும் மீண்டும் 2:35 ஆக அக்கால்வாய் வழியே கிழக்கு நோக்கியும் அங்கிருந்து 2:75 ஆக இனங் காணப்படுகின்ற அக்கால்வாய் வழியே கிழக்கு நோக்கியும் அங்கு சந்திக்கும் எல்லைத் தேசப்படம் 320148 இன் வலயம் 3 இன் வடக்கு எல்லையான முறையே 3:1, 3:36, 3:37 ஆக காட்டப்பட்டுள்ள கள்கெடியாவ ஓயா வழியே கிழக்கு நோக்கியும் கம்பளை நகர எல்லை வழியே வடக்கு நோக்கியும் இவ்வெல்லை, எல்லைத் தேசப்படம் 320081 வலயம் 2 தெற்கு எல்லை மற்றும் மஹவலி கங்கையின் மத்திய கோட்டைச் சந்திக்கும் புள்ளியிலிருந்து தெற்கு நோக்கி கங்கையின் மத்திய கோட்டின் வழியே எல்லைத் தேசப்படம் 320021 வலயம் 1 வரையும் அங்கிருந்து அதன் தெற்கு எல்லை வழியே சென்று எல்லைத் தேசப்படம் 320021 வலயம் 4 துண்டு 4:41 தரண ஓயாவைச் சந்திக்கும் இடத்திலிருந்து முறையே துண்டு இல. 4:40, 4:43, 4:44, 4:50, 4:51, 4:52, 4,54 இன் தெற்கு எல்லை வழியே கிழக்கு நோக்கி 4:56 கால்வாய் வரை சென்று அக்கால்வாய் வழியே பிரதேச சபைக்கு உரித்தான அங்கம்மன குடி யேற்றம் வரை செல்லும் வீதியைச் சந்திக்கும் புள்ளி வரையும், அங்கிருந்து 320021 வலயம் 5 துண்டு இலக்கம் முறையே துண்டுகள் 5:38, 5:45, 5:49, 5:59, 5:51, 5:53, 5:54, 5:53, 5:55, 5:56 இன் தெற்கு எல்லை வழியே கிழக்கு நோக்கியும் அங்கு சந்திக்கும் 5:57 கால்வாய் வழியேயும் எல்லைத் தேசப்படம் 320021 வலயம் 6 இன் 6:25 உம் எல்லைத் தேசப்படம் 320078 வலயம் 2 இன் 2:6 மூலம் காட்டப்படும் கால்வாய் சந்திக்கும் இடத்தின், அவ் வரைபடத்தின் பத்திரம் 5 இன் துண்டு இலக்கம் 2:41 ஆம் கால்வாய் வழியே தெற்கு நோக்கியும் அதன் பிறகு அவ்வெல்லைத் தேசப்படம் 320078 பத்திரம் 6 இன் துண்டு 2:56 ம் வீதியின் வழியே 2:60 துண்டு வரையும், அங்கிருந்து அத்துண்டின் மேற்கு எல்லை வழியே தெற்கு நோக்கியும் அதன் தெற்கு எல்லை வழியே 2:61 சந்தித்து அத்துண்டின் தெற்கு எல்லை வழியே கிழக்கு நோக்கியும், அப்போது சந்திக்கும் கம்பளை-கஹவத்த வீதி வரையும் அங்கிருந்து எல்லைத் தேசப்படம் 320078 இதன் வலயம் 3 இன் துண்டு 3:20 எனும் அவ்வீதியை ஊடறுத்து முறையே துண்டு 3:19, 3:18, 3:5 இன் தெற்கு எல்லை வழியே கிழக்கு நோக்கியும் அங்கிருந்து எல்லை தேசப்படம் 320077 இன் வலயம் 2 துண்டு 2:79 மூலம் காட்டப்படும் வீதியின் வழியே எல்லைத்தேசப்படம் 320078 வலயம் 3 சந்திக்கும் இடம் வரையும், அங்கிருந்து துண்டு இலக்கம் முறையே 2:26, 6:65, 2:64, 6:61, 2:60, 2:2, 2:1 இன் வடக்கு எலலை வழியே கிழக்கு நோக்கியும் அங்கு சந்திக்கும் 2:58 ஆம் பிரதேச சபைப் பாதை 320078 ஆம் துண்டு இலக்கம் 2:18 மூலம் காட்டப்படும் பாதை வரையும் அங்கிருந்து அவ்வீதியின் வழியே கிழக்கு நோக்கி எல்லைத் தேசப்படம் 320119 வலயம் 3 சந்திக்கும் இடம் வரையும் அங்கிருந்து அவ்வரைபடத்தின் துண்டு 3:1, 3:2 மூலம் காட்டப்படும் வீதி வழியே கிழக்கு நோக்கியும் அங்கிருந்து துண்டு 3:4, 3:5 இன் கிழக்கு எல்லை வழியே தெற்கு நோக்கியும் அங்கிருந்து அவ்வரைபடத்தின் பத்திரம் 5 இன் துண்டு 3:18, 3:19, 3:20 இன் வடக்கு எல்லை வழியே கிழக்கு நோக்கியும், அங்கிருந்து துண்டு 3:10 மூலம் காட்டப்படும் பாதை வழியே, எல்லை தேசப்படம் 320119, வலயம் 2 துண்டு 2:1 மூலம் காட்டப்படும் கால்வாய், துண்டு 2:2 மூலம் காட்டப்படும் அடபாகே ஓயாவைச் சந்திக்கும் இடம் வரையும், அங்கிருந்து அவ் ஓயாவின் மத்திய கோட்டின் வழியே வடகிழக்கு நோக்கிச் சென்று அங்கே, சந்திக்கும் எல்லைத் தேசப்படம் 320177 வலயம் 1 இன் துண்டு 1:31 ஆரம்பம் வரையுமான எல்லை ஆகும் :*

*கிழக்கு :*

*எல்லைத் தேசப்படம் இலக்கம் 320177 வலயம் 1 இன் துண்டு இலக்கம் 1:64 இன் தெற்கு எல்லையின் இறுதிப் புள்ளியான அடபாகே ஓயாவின் மத்திய கோட்டைச் சந்திக்கும் இடத்திலிருந்து தென் கிழக்கு நோக்கி ஓடும் அடபாகே ஓய கண்டி– நுவரெலியா மாவட்ட எல்லையைச் சந்திக்கும் இடம் வரை சென்று அவ் எல்லை வழியே மீண்டும் மேற்கு நோக்கிச் செல்லும்போது சந்திக்கும் எல்லைத் தேசப்படம் இலக்கம் 320149 வலயம் 1 இன் துண்டு இலக்கம் 1:37, 1:2 மற்றும் 1:7 உம் அதன் பின் எல்லைத் தேசப்பட இலக்கம் 320149 வலயம் 2 இன் துண்டு இலக்கம் 2:3 மற்றும் 2:10 மற்றும் எல்லை தேசப்பட இலக்கம் 320141 வலயம் 1 இன் துண்டு இலக்கம் 1:58 என்பவற்றின் தெற்கு எல்லை வழியே சென்று முடியும் எல்லையாகும் :*

*தெற்கு :*

*அதன் பிறகு எல்லைத் தேசப்படம் இலக்கம் 320141 இன் துண்டு 1:58 இறுதி புள்ளியிலிருந்து ஆரம்பமாகும் எல்லைத் தேசப்படம் இலக்கம் 320141 இன் வலய இலக்கம் 1 இன் தெற்கு எல்லையின் இறுதி புள்ளியிலிருந்து எல்லைத் தேசப்பட இலக்கம் 320060 வலயம் 1 இன் துண்டு இலக்கம் 2 ஆம் கல்படி ஓயா வழியே தெற்கேயும், எல்லைத் தேசப்படம் இலக்கம் 320070 வலயம் 1 இன் துண்டுஇலக்கம் 1:19, 1:10, 1:11, 1:14, 1:15, 1:16 மற்றும் 1:17 இன் கிழக்குஎல்லை வழியே தெற்கு நோக்கியும் அதன் பின்னர் கண்டி நுவரெலியா மாவட்ட எல்லை வழியே மேற்கு நோக்கிச் சென்று அவ்எல்லையிலேயே எல்லைத் தேசப்படம் இலக்கம் 320158 வலயம் 1 இன் துண்டு இலக்கம் 1:26, 1:27, 1:29, 1:30, 1:60, 1:58, 1:57 , உம் எல்லைத் தேசப்படம் இலக்கம் 320093 வலயம் 2 இன் துண்டு இலச்கம் 3 தல்கஹகந்துர 3:4, 3:1, 3:7, 3:5, உம் எல்லைத் தேசப்படம் இலக்கம் 320091 வலயம் 1 இன் 1:78, 1:79, 1:77 உம் எல்லைத் தேசப்படம் இலக்கம் 320091 வலயம் 1 இன் 1:34, 1:33, 1:32, 1:30, 1:65: 1:120, 1:119 மற்றும் 1:117 இன் தெற்கு எல்லை வழியே மஹாவலி கங்கையின் மத்திய கோடு வரையும். இக்கோடடின் வழியே மேற்கு நோக்கி எல்லைத் தேசப்படம் இலக்கம் 320143 இன் வலயம் 1 இன் துண்டு 1:2, 1:68 மற்றும் மஹாவலி கங்கை வழியேயும் மீண்டும் கண்டி நுவரெவியா மாவட்ட எல்லையான மஹாவலி கங்கையின் மத்திய கோட்டின் வழியே எல்லைத் தேசப்படம் இலக்கம் 320041 இன் வலயம் 1 ஜ சந்திக்கும் புள்ளி வரையும், அங்கிருந்து துண்டு இலக்கம் 1:56 வழியே வடக்கு நோக்கி சென்று அதன் இறுதிப்புள்ளி வரையான எல்லையாகும் :*

*மேற்கு:*

*எல்லைத் தேசப்படம் இலக்கம் 320041 வலயம் 1 துண்டு 1:56 இறுதிப் புள்ளியில் ஆரம்பித்து எல்லைத் தேசப்படம் இலக்கம் 320041 இன் மேற்கு எல்லையில் இறுதிப் புள்ளியிலிருந்து எல்லைத் தேசப்படம் இலக்கம் 320042 வலயம் 3 இன் மஹாவலி கங்கை வழியேயும் எல்லைத் தேசப்படம் இலக்கம் 320040 வலயம் 1 இன் துண்டு இலக்கம் 1:13 வழியே எல்லைத் தேசப்படம் இலக்கம் 320042 வலையம் 1 இன் மேற்கு எல்லையான மஹாவலி கங்கையின் மத்திய கோட்டின் வழியே வடக்கு நோக்கியும், எல்லைத் தேசப்படம், 320088 வலயம் இலக்கம் 3 துண்டு இலக்கம் 71 மகாவலி கங்கை வழியே வடகிழக்கு நோக்கியும், அம்மத்திய கோட்டின் வழியே வடக்கு நோக்கிச் செல்லும்போது சந்திக்கும் எல்லைத் தேசப்படம் இலக்கம் 320135 வலய இலக்கம் 2 இன் துண்டு இலக்கம் 2:51 எல்லையான மஹாவலி கங்கையின் மத்திய கோட்டின் வழியே வடக்கு நோக்கிச் செல்லும்போது அதி இழுவிசை மின்வழிப்பாதை மஹாவலி ஊடறுத்துச் செல்லும் இடத்தில் ஆரம்பமாகும் கம்பளை மாநகர சபை எல்லையின் தெற்கு மற்றும் மேற்கு எல்லை வழியே சென்று எல்லைத் தேசப்படம் இல்க்கம் 320057 வலயம் 3 இன் துண்டு இலக்கம் 3:189, 3:188, 3:187, 3:186, 3:185, 3:184, 3:173, 3:209 மேற்கு எல்லை வழியே வடக்கே சென்று அங்கிருந்து உடபளாத்த கங்கஇஹள கோரள பிரதேச செயலாளர் பிரிவு எல்லை வழியே, இவ் எல்லை செல்லும் கோயில் கால்வாயின் வடக்கேயும், அதன் வடகிழக்கு எல்லையிலிருந்து மீண்டும் கல்பிஹில்ல கால்வாய் சந்திக்கும் இடத்திலிருந்து, வடக்கே கண்டி - கேகாலை மாவட்ட எல்லை வழியே வடக்குத் திசை நோக்கிச் சென்று அங்கு சந்திக்கும் எல்லைத் தேசப்படம் இலக்கம் 320075 வலயம் 5 ஆரம்பப்புள்ளி வரையுமான எல்லை ஆகும்.*

*1 - 510/1*

---

**நகர சபைகள் கட்டளைச்சட்டம்**

**கட்டளை**

*(255 ஆம் அத்தியாயமான)நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 2, 3, 5, 9 ஆம் பிரிவுகளினால் மற்றும் 184 ஆவது பிரிவின் (7) ஆவது உபபிரிவினாலும் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாஉல்லா ஆகிய நான், இக்கட்டளை மூலம்,*

(1) இதற்கான அட்டவணையின் I ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள இடப்பரப்பை அக்கட்டளைச்சட்டத்தின் நோக்கத்துக்கென நகர இடப்பரப்பொன்றாக வெளிப்படுத்துகின்றேன்.

(2) அந்த அட்டவணையின் II ஆம் பாகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளை, அந்நகரத்தின் நிர்வாக எல்லைகளாக நிர்ணயிக்கின்றேன்.

(3) இக்கட்டளையின் (I) ஆம் பந்தியின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட நகரத்திற்கென ஒரு நகர சபையை அமைத்துருவாக்கி அத்தகைய சபைக்குப் பின்வரும் பெயரைக் குறித்தொதுக்குகின்றேன் -

**"பாணந்துறை நகர சபை"**

(4) பாணந்துறை நகர சபையானது தவிசாளரையும், உப தவிசாளரையும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏனைய ஏழு உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டுமென விதித்துரைக்கின்றேன்.

(5) பாணந்துறை நகர சபையின் பதவிக்காலம் ஆரம்பமாக வேண்டிய திகதியாக 2011 ஏப்ரல் மாதம் முதலாம் திகதியைக் குறித்துரைக்கின்றேன்.

(6) மேல் மாகாணத்தின் முதலமைச்சரும் உள்ளூராட்சித் துறை அமைச்சருமாகியவரினால் 2008 சனவரி மாதம் 16 ஆம் திகதிய 1532/10 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பாணந்துறை நகர சபையை கலைப்பதற்கான கட்டளையை 2011 ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வரை அமுலுக்கு வரும் வகையில் நீக்குகின்றேன்.

ஏ. எல். எம். அதாஉல்லா,
உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்.

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு,
கொழும்பு,
2011, சனவரி 05.

**அட்டவணை**

**பகுதி** - I

**பாணந்துறை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள பின்வரும் கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய காணி இடப்பரப்பு :**

(679) வளான, (683ஏ) வளப்பலபட்டிய, (685) பட்டிய வடக்கு, (685ஏ) கடைவீதி வடக்கு, (685பி) கடை வீதி, (685சி) கடை வீதி மேற்கு, (685டி) சாகர பிளேஸ், (686) பட்டிய தெற்கு, (686ஏ) உயன்கலே, (686பி) பட்டிய, (687) வதகட மேற்கு, (687சி) வாகட வடக்கு, (692) நல்லுறுவ, (692ஏ) நல்லுறுவ வடக்கு, (681) தந்திரிமுல்ல (ஒரு பகுதி), (682) உடகமுல்ல (ஒரு பகுதி), (682ஏ) குருப்புமுல்ல (ஒரு பகுதி), (682பி) அற்றம்பகொட (ஒரு பகுதி) (689ஏ) மொறவின்ன.

**பாகம்** II

**பாணந்துறை நகர சபையின் நிர்வாக எல்லைகள்:**

வடக்கு :

பாணந்துறை ஆற்றின் மத்திய கோட்டில், கொரக்காப்பொல கிராமத்தின் தெற்கெல்லை, சொல்லப்பட்ட மத்திய கோட்டைச் சந்திக்குமிடத்திலிருந்து வடகிழக்கு நோக்கி சொல்லப்பட்ட எல்லையோரமாக கொழும்பு-காலி வீதியின் மேற்கெல்லைக்கு வரையப்பட்ட கோடொன்றினால் அங்கிருந்து வடக்கு நோக்கி சொல்லப்பட்ட மேற்கு எல்லையோரமாக டயமன் ஜூபிலி வீதியின் வட எல்லைக்கு நேரே ஒரு இடத்திற்கு வரையப்பட்ட கோடொன்றினால், அங்கிருந்த கிழக்கு நோக்கி கொழும்பு காலி வீதிக்குக் குறுக்காகவும் டயமன் ஜூபிலி வீதியின் வட எல்லையோரமாக, கொரக்காப்பொல கிராமத்தின் தெற்கெல்லையின் கிழக்குக் கடைசியில் வத்தப்பொல வீதியின் மேற்கெல்லையை அது சந்திக்கும் வரை அங்கிருந்து தென்கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட வத்தபொல வீதியின் குறுக்கே அதன் கிழக்கெல்லைக்கு, அங்கிருந்து தெற்கு நோக்கி வத்தப்பொல வீதியின் கிழக்கெல்லையோரமாக முதலாம் குறுக்குத் தெருவின் வட எல்லைக்கு, அங்கிருந்து கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட வீதியின் வட எல்லையோரமாக பாணந்துறை பட்டின அளவைத்தாள் எல். 16/47 -2 கிழக்கிலுள்ள காணித்துண்டு 82 இன் கிழக்கெல்லைக்கு நேரே ஒரு இடத்திற்கு, அங்கிருந்து தெற்கு நோக்கி முதலாம் குறுக்குத்தெருவிற்குக் குறுக்கே சொல்லப்பட்ட காணித்துண்டு 82 இன் வடகிழக்கு மூலையிலுள்ள எல்லைக்குறிப்பிற்கு, அங்கிருந்து தென் கிழக்கு நோக்கியும் வடகிழக்கு நோக்கியும், பாணந்துறைப்பட்டின அளவைத்தாள் எல். 16/47 - 2 கிழக்கிலும், எல். 16/48 - 3 மேற்கிலும் காட்டப்பட்ட எல்லையாகக் குறிப்பிட்ட காணிகளோரமாக பாணந்துறை பட்டின அளவைத்தாள் எல். 16/48 - 3 மேற்கிலுள்ள காணித்துண்டு 34 இன் வடகிழக்கு மூலையிலுள்ள எல்லைக்குறிப்பிற்கு, அங்கிருந்து வட மேற்கு நோக்கி, பொது இடுகாட்டின் மேற்கெல்லையோரமாக, சொல்லப்பட்ட இடுகாட்டின் வட எல்லையோரமாக செல்லும் பாதையின் தெற்கெல்லைக்கு, அங்கிருந்து வடமேற்கு நோக்கி சொல்லப்பட்ட இடுகாட்டின் மேற்கெல்லையின் நீடிப்பில் சொல்லப்பட்ட பாதைக்கு குறுக்காக சொல்லப்பட்ட பாதையின் வட எல்லைக்கு ; அங்கிருந்து கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட பாதையின் வட எல்லையோரமாக சொல்லப்பட்ட இடுகாட்டின் கிழக்கெல்லையோரமாகச் செல்லும் பாதையின் கிழக்கெல்லைக்கு நேரே ஒரு இடத்திற்கு, அங்கிருந்து தெற்கு நோக்கி சொல்லப்பட்ட பாதையின் குறுக்காகவும் சொல்லப்பட்ட கிழக்கெல்லையோரமாகச் செல்லும் பாதையின் கிழக்கெல்லையோரமாகவும், பாணந்துறை பட்டின அளவைத்தாள் எல். 16/48 - 3 மேற்கிலுள்ள காணித்துண்டு 42 இன் வடமேற்கு மூலைக்கு, அங்கிருந்து கிழக்கு நோக்கியும் வடகிழக்கு நோக்கியும் பாணந்துறைப் பட்டின அளவைத்தாள் எல். 16/48 - 3 மேற்கு, எல். 16/48 - 3 கிழக்கு, எல். 16/48 - 3 மேற்கு என்பனவற்றில் காட்டப்பட்ட எல்லையாகக் குறிப்பிடப்பட்ட காணிகளோரமாக பாணந்துறை பட்டின அளவைத்தாள் எல். 16/48 - 4 மேற்கிலுள்ள காணித்துண்டு 7 இன் வடகிழக்கு மூலையில் எல்லைக்குறிப்பிற்கு, அங்கிருந்து வட கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட காணித்துண்டு 7 இன் வட எல்லையின் நீடிப்பில் தந்திரிமுல்ல எலவின் மத்திய கோட்டிற்கு ;

கிழக்கு :

கடைசியாகக் கூறப்பட்ட இடத்திலிருந்து தெற்கு நோக்கி தந்திரிமுல எலவின் மத்திய கோட்டினோரமாக பாணந்துறை பட்டின அளவைத்தாள் எல். 16/48 - 4 மேற்கிலுள்ள காணித்துண்டு 30 இன் தெற்கெல்லைக்கு நேரே ஒரு இடத்திற்கு வரையப்பட்ட கோடொன்றினால், அங்கிருந்து தென் மேற்கு நோக்கி தந்திரிமுல எலவிற்குக் குறுக்காக சொல்லப்பட்ட காணித்துண்டு 30 இன் தென் கிழக்கு மூலையிலுள்ள எல்லைக் குறிப்பிற்கு, அங்கிருந்து தென் மேற்கு நோக்கியும் கிழக்கு நோக்கியும் பாணந்துறை பட்டின அளவைத்தாள்கள் எல். 16/48 - 4 மேற்கு, எல். 16/48 - 3 கிழக்கு, எல். 16/56 - 1 கிழக்கு, எல். 16/56 - 2 மேற்கு என்பனவற்றில் காட்டப்பட்டுள்ள எல்லையாகக் குறிப்பிடப்பட்ட காணிகளோரமாகப் பாணந்துறை பட்டின அளவைத்தாள் எல். 16/48 - 4 மேற்கிலுள்ள காணித்துண்டு 37 இன் வடகிழக்கு மூலையில் தந்திரிமுல

எலவின் இடதுகரையிலுள்ள எல்லைக் குறிப்பிற்கு, அங்கிருந்து கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட காணித்துண்டு 37 இன் வட எல்லையின் நீடிப்பில் தந்திரிமுல எலவின் மத்திய கோட்டினோரமாக, அங்கிருந்து தென் கிழக்கு நோக்கி தந்திரிமுல எலவின் மத்திய கோட்டினோரமாக பாணந்துறை பட்டின அளவைத்தாள் எல். 16/56 - 2 மேற்கிலுள்ள காணித்துண்டு 19 1/2 இன் தெற்கெல்லைக்கு நேரே ஒரு இடத்திற்கு, அங்கிருந்து தென்மேற்கு நோக்கி சொல்லப்பட்ட எலவிற்கு குறுக்காக சொல்லப்பட்ட காணித்துண்டு 19 1/2 இன் தென் கிழக்கு மூலைக்கு, அங்கிருந்து தென் மேற்கு நோக்கியும் மேற்கு நோக்கியும் பாணந்துறை பட்டின அளவைத் தாள்கள் எல். 16/ 36 - 2 மேற்கு, எல். 16/ 56 - 1, கிழக்கு என்பவற்றில் காட்டப்பட்ட எல்லையாகக் குறிப்பிடப்பட்ட காணிகளோரமாக எத்தம்பகொட வீதியின் தெற்கெல்லையின், கிழக்கே 5 சங்கிலியின் ஒரு இடத்திற்கு, அங்கிருந்து தென் மேற்கு நோக்கி எத்தம்பகொட வீதியின் தெற்கெல்லைக்கு சமாந்தரமான கோட்டினோரமாக பாணந்துறை பட்டின அளவைத் தாள் எல். 16/56 - 1 மேற்கில் இல. காட்டப்பட்ட எல்லையாகக் குறிப்பிடப்பட்ட காணியை அது சந்திக்கும் வரை, அங்கிருந்து தெற்கு நோக்கி சொல்லப்பட்ட தாளில் காட்டப்பட்டுள்ள எல்லையாகக் குறிப்பிடப்பட்ட காணியோரமாக கமல்கொட வீதியின் வட எல்லையை அது சந்திக்கும் வரை, அங்கிருந்து கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட வீதியும் வட எல்லையோரமாக வலப்பொல வீதியின் கிழக்கெல்லைக்கு நேரே ஒரு இடத்திற்கு, அங்கிருந்து தெற்கு நோக்கி கமல்கொட வீதிக்கு குறுக்காகவும், வலப்பொல வீதியின் கிழக்கெல்லையோரமாகவும், வலப்பொல வீதியினதும் ஹொரண வீதியினதும் சந்தியின் மத்தியின் வடக்கே 10 சங்கிலியில் இருக்கும் புள்ளிவரை, அங்கிருந்து கிழக்கு நோக்கி ஹொரண வீதியின் மத்திய கோட்டிற்குச் சமாந்தரமான கோட்டினோரமாக பின் வீதியின் கிழக்கெல்லையை அது சந்திக்கும்வரை, அங்கிருந்து தெற்கு நோக்கி சொல்லப்பட்ட வீதியின் பின்வல கிழக்கெல்லையோரமாக பாணந்துறை பட்டின அளவைத்தாள் எல். 16/58 - 4 மேற்கில் காட்டப்பட்டுள்ள எல்லையாகக் குறிப்பிடப்பட்ட காணிக்கு, அங்கிருந்து தென்கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட எல்லையாகக் குறிப்பிடப்பட்ட காணியோரமாக சொல்லப்பட்ட தாளிலுள்ள காணித்துண்டு 21 இன் வடகிழக்கு மூலையில் எல்லையாகக் குறிப்பிடப்பட்ட காணிக்கு, அங்கிருந்து தெற்கு நோக்கியும், வட மேற்கு நோக்கியும், மேற்கு நோக்கியும், பாணந்துறை பட்டின அளவைத்தாள் எல். 16/56 - 4 மேற்கிலும் எல். 16/56 - 3 கிழக்கிலும் காட்டப்பட்டுள்ள எல்லையாகக் குறிப்பிடப்பட்ட காணிகளோரமாக மொரவின்ன வீதியின் மேற்கெல்லையின் கிழக்கே 5 சங்கிலியில் ஒரு இடத்திற்கு, அங்கிருந்து தெற்கு நோக்கி சொல்லப்பட்ட வீதியின் மேற்கெல்லைக்கு சமாந்தரமான ஒரு கோட்டினோரமாக மோதரவில்ல வீதியின் தெற்கெல்லையை அது சந்திக்கும் வரை, அங்கிருந்து தென்மேற்கு நோக்கி சொல்லப்பட்ட வீதியின் தெற்கெல்லையோரமாக மோதரவிலதீப, எலவின் மத்திய கோட்டை அது சந்திக்கும் வரை, அங்கிருந்து தென் கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட எலவின் மத்திய கோட்டினோரமாக வணக்கத்திற்குரிய எஸ். சொபிதாவினால் கோரப்பட்ட பொகஹவத்தையின் வட எல்லையாக அமையும் வடிகாலின் தெற்கெல்லைக்கு நேராக ஒரு கோட்டில் ஒரு இடத்திற்கு ;

தெற்கு :

கடைசியாகக் கூறப்பட்ட இடத்திலிருந்து தென் மேற்கு நோக்கி மோதரவில தீப எலவிற்குக் குறுக்காகவும் வணக்கத்துக்குரிய எஸ். சொபிதா வினால் கோரப்பட்ட போகஹவத்தை டபிள்யு. ஜேமிஸ் பிரனாந்துவினால் கோரப்பட்ட தெல்கஹவத்த, மாட்டின் பீரிஸ்சினால் கோரப்பட்ட ஜம்புகஹவத்த, டபிள்யு. ஜூனியஸ் பெரேராவினாலும் ஏனையோராலும் கோரப்பட்ட கஹத்தகஹவத்தை, எல்.ரொஸ்லின் என்பவராலும் ஏனையோராலும் கோரப்பட்ட ஹந்திகேவெல, எஸ். கேர்லின் டீ சில்வாவினால் கோரப்பட்ட ருக்கஹவத்தை என்பனவற்றின் வட எல்லைகளாக அமையும் வடிகாலின் தெற்கெல்லையோரமாகவும் கொழும்பு காலி வீதியின் கிழக்கெல்லையை அது சந்திக்கும் வரை வரையப்பட்ட கோடொன்றினால், அங்கிருந்து மேற்கு நோக்கி சொல்லப்பட்ட வீதிக்குக் குறுக்காக பாணந்துறை பட்டின அளவைத்தாள் எல். 16/64 - 3 கிழக்கில் காணித்துண்டு 97 இன் தென் கிழக்கு மூலையிலுள்ள எல்லைக்குறிப்பிற்கு, அங்கிருந்து தென் மேற்கு நோக்கியும் வட மேற்கு நோக்கியும் மீண்டும் தென் மேற்கு நோக்கி பாணந்துறை பட்டின அளவைத்தாள் எல். 16/64 - 3 கிழக்கு, 16/64 - 3 மேற்கு என்பனவற்றில் காட்டப்பட்டுள்ள எல்லையாகக் குறிப்பிடப்பட்ட காணிகளோரமாக புகை வண்டிப் பாதையைக்கடந்து கடலின் தாழ்ந்த நீர்ப்பரப்பு வரை தென்மேல், வடமேல் மற்றும் மீண்டும் தென்மேல் நோக்கி வரையப்பட்ட கோட்டின் மூலமும்,

மேற்கு:

கடைசியாகக் கூறப்பட்ட இடத்திலிருந்து வடமேற்கு நோக்கி கடலின் தாழ்ந்த நீர்மட்டக் குறிப்போரமாக பாணந்துறை ஆறு கடலில் சங்கமமாகுமிடத்தின் மத்திக்கு வரையப்பட்ட கோடொன்றினால் அங்கிருந்து வட கிழக்கு நோக்கியும் வட மேற்கு நோக்கியும் பாணந்துறை ஆற்றின் மத்திய கோட்டினோரமாக பிரதேசத்தின் வட எல்லை ஆரம்பமாகுமிடத்திற்கு.

1 - 510/2

---

**நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழான கட்டளை**

(255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 9 ஆவது பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாஉல்லா ஆகிய நான், 2005 திசெம்பர் 12ஆம் திகதிய 1423/2 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மன்னார் நகர சபையை அமைத்துருவாக்குவது தொடர்பான கட்டளையின் (5) ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள "2006, ஏப்ரல் மாதம் பதினைந்தாம் திகதி" என்பதற்கு பதிலாக, "2011 ஏப்ரல் மாதம் முதலாம் திகதி" என்றவாறு பதிலீடு செய்வதன் மூலம் திருத்தி அமைக்கின்றேன்.

ஏ. எல். எம். அதாஉல்லா,
உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்.

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு,
கொழும்பு,
2011, சனவரி 04.

01- 510/3

**1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்**

**கட்டளை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் மூலம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் ஏ. எல். எம். அதாஉல்லா ஆகிய நான், 2005 டிசம்பர் முதலாம் திகதிய 1421/ 26 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட காரைநகர் பிரதேச சபையை அமைத்துருவாக்குவது தொடர்பான கட்டளையின் (5) ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள "2006 ஏப்ரல் மாதம் பதினைந்தாம் திகதி" என்பதற்கு பதிலாக, "2011 ஏப்ரல் மாதம் முதலாம் திகதி" என்றவாறு பதிலீடு செய்வதன் மூலம் திருத்தி அமைக்கின்றேன்.*

*ஏ. எல். எம். அதாஉல்லா,*
*உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்.*

*உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு,*
*கொழும்பு,*
*2011, சனவரி 04.*

*1 - 510/4*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.